# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 | தை 17 | வியாழக்கிழமை | 30.01.2025 | கதிர் 112



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# தமிழரசின் மூத்த தலைவர் மாவைக்குப் பலரும் அஞ்சலி

## சிறீதரன் தலைமையில் கட்சிக் கொடி போர்த்தப்பட்டது





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

7➤

## அநீதிக்கு எதிராகத் துணிந்து குரல் கொடுத்தவரே மாவை

### அமைச்சர் சந்திரசேகர் அனுதாபம்



யாழ்ப்பாணம், ஜன. 30

“அறவழிப் போராட்டம், சிறைவாசம் எனத் தனது ஐந்து தசாப்தகால அரசியல் பயணத்தில் தமிழ் மக்களுக்காகக் குரல் எழுப்பி வந்த மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்குப்

7➤

## தமிழ்த் தேசிய அடையாளம் மாவை என்பது நிதர்சனம்

### மனோ எம்.பி. இரங்கல்



கொழும்பு, ஜன. 30

சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற தகைமைகளுக்கு அப்பால், அண்ணன் மாவை, ஒரு தமிழ்த்

7➤

## மாவையின் மறைவு தமிழருக்குப் பேரிழப்பு

### இரங்கல் செய்தியில் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழர்களுக்குப் பேரிழப்பாகும் என்று இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“இலங்கைத்தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா தனது ஐந்து தசாப்தகால அரசியல் வாழ்க்கையில், அறவழிப் போராட்டம், சிறைவாசம் எனத் தமிழ் மக்களுக்களின்

7➤

## சிவஞானம், சங்கரி நேரில் அஞ்சலி





யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்குக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அஞ்சலி செலுத்தினார்.

7➤

## மாவையின் புகழுடலுக்கு இந்தியத் துணைத் தூதுவர் அஞ்சலி







யாழ்ப்பாணம், ஜன 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி அஞ்சலி செலுத்தினார்.

அத்தோடு அரசியல்

7➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ராஜபக்சர்களுக்கு கனடா அரசியல் கட்சி விடுத்துள்ள எச்சரிக்கை

கொழும்பு , ஜன 30

தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த ராஜபக்சர்களையும், ஏனைய குற்றவாளிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவசியமான தலைமைத்துவத்தை, கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சி மேற்கொள்ளும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'ஹார்வெஸ்ட் ஒஃப் ஹோப்' நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ் இந்த கருத்தை பகிரங்கமாக முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"அடுத்த தேர்தலில் தான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தரப்பினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுச் செல்வேன்.

குறித்த நடவடிக்கைக்கு அவசியமான தலைமைத்துவத்தை வழங்கத் தயாராக உள்ளேன்.

முன்னதாக தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை அரசாங்கத்தை தனிமைப்படுத்தி தண்டிக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை தமது கட்சியை சேர்ந்த கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் புறக்கணித்திருந்தார். மேலும், கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆற்றிய பங்களிப்பு பெரிதும் பாராட்டத்தக்கது.

அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த ராஜபக்சர்களையும், ஏனைய குற்றவாளிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவசியமான தலைமைத்துவத்தை கொன்சவேட்டிவ் கட்சியின் பிரதமரான நான் வழங்குவேன் எனவும் பியெர் பொய்லிவ் உறுதியளித்தார். (ஐ)



## கையினால் அறுவடையினை மேற்கொள்ளும் விவசாயிகள்!









கிளிநொச்சி, ஜன 30

கிளிநொச்சி மாவட்டத்தின், குறிப்பாக கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளைந்த நெல் வயல்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த நெல் வயல் நிலங்களில் தங்களின் உணவுத் தேவைக்காவது அரிசியை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கையினால் நெல் அறுவடை செய்யவதனை இன்றைய தினம் அவதானிக்க முடிந்தது.

இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் என்றும் இல்லாதவாறு காலபோக நெல் வயல்கள் வெள்ள அனர்த்தங்களினால் அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடையினை இயந்திரம் கொண்டு அறுவடை செய்ய முடியாத நிலையில் தொடர்ச்சியான வெள்ள நிலைமை காரணமாக தமது உணவுத்தேவைக்காவது அரிசியை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் கையினால் நெல் அறுவடை செய்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தமது தோள்களிலே சுமந்து சென்று அறுவடை செய்த நெல்லினை வீதிகளில் நெல்லினை உலர வைத்த பின்னரே நெல்லினை பயன்படுத்த முடியும் எனவும் தேறிய முழுமையான நெல்லாக இல்லை எனவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், கிளிநொச்சி மாவட்டத தின் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களை கமநல காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்கள் மற்றும் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள் சென்று இன்று பார்வையிட்டனர்.

இதன்போது, கண்டாவளை, முரசுமோட்டை, பன்னங்கண்டி, உருத்திரபுரம் பெரியகுளம் உள்ளிட்ட பகுதிகளில் சென்று பார்வையிட்டனர். மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக அழிவடைந்த பகுதிகளை பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)

## முல்லை வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் தடைப்பட்ட சேவைகள்







*முல்லைத்தீவு, ஜன 30*

*முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் நேற்று சிறுதுநேரம் வெளிநோயாளர் பிரிவின் வைத்திய சேவைகள் தடைப்பட்டிருந்தன.*

*இந்நிலையில், இதுகுறித்து பொது மக்களால் வன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிடப்பட்டுள்ளது.*

*இதையடுத்து, இது குறித்து முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளரன்உதவியுடன் பிறிதொரு வைத்தியரை வைத்திய சேவையில்ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படடுள்ளது.*

*இதன்போது வைத்தியசாலைக்கு சென்றிருந்த துரைராசா ரவிகரன் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், "மருத்துவத் தேவைப்பாடுகள் இங்கு அதிகமாகக்காணப்படுகின்றன.*

*முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்த தேவைப்பாடுகள் தொடர்பாக என்னிடம் ஏற்கனவே தெரியப்படுத்தியிருக்கின்றார். முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலை மாத்திரமல்லாது, முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் காணப்படும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் என்னிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.*

*இந்த தேவைப்பாடுகள் குறித்து ஏற்கனவே எம்மால் சுகாதார அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், தற்போது, முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வைத்தியர்கள் எவருமில்லை. அத்தோடு வைத்திய சேவைகளைப் பெறுவதற்கு வந்த பொதுமக்கள் அவதிப்படுவதாகவும் என்னிடம் முறையிடப்பட்டிருந்தது.*

*அதற்கமைய இது தொடர்பில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் இது குறித்து தொலைபேசியில் கலந்துரையாடியிருந்தேன். இந்நிலையில் தாம் உடனடியாகப்பிறிதொரு வைத்தியரை கடமையில் ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தார்.*

*அந்தவகையில் மக்களின் முறைப்பாட்டிற்கு அமைவாக முல்லைத்தீவு ஆதாரவைத்தியசாலைக்கு நேரடியாகவருகைதந்து நிலமைகளைப் பார்வையிட்டிருந்தேன்.*

*இங்கு பிறிதொரு வைத்தியர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. இங்கு நிலவும்மருத்துவத் தேவைகள், வைத்திய ஆளணிப்பற்றாக்குறைகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும்" என்றார்.*

*(ஐ)*

# போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரிய யாழ். பொலிஸாரின் மனு இன்று தள்ளுபடி

## நாளை வேலையற்ற பட்டதாரிகள் திட்டமிட்டபடி கவனயீர்ப்பு

யாழ்ப்பாணத்தில் நாளை தினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரிய பொலிஸாரின் மனுவை யாழ். நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நாளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வருகை தரவுள்ள நிலையில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டு இருந்தனர்.

அந்நிலையில் நேற்று புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, வடக்கு மாகாண வேலையிலாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன், தற்காலிக சுகாதார உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் எஸ்.ஜெஸ்மின் ஆகிய ஐவரின் பெயர்களைக் குறிப்பிட்டு , நாளைய தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போராட்டங்களை நடத்தத் தடை விதிக்க வேண்டும் எனப் பொலிஸார் மன்றில் மனுத் தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணைக்காகப் பெயர் குறிப்பிட்ட ஐந்து நபர்களையும் மன்றில் முன்னிலையாகுமாறு மன்று அழைப்புக் கட்டளை நேற்று விடுத்திருந்தது.

அந்நிலையில் குறித்த வழக்கு இன்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, அழைப்பு கட்டளை வழங்கப்பட்ட நபர்கள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அதில் வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவரின் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், வேலையற்ற பட்டதாரிகள் தமது கோரிக்கையை முன்வைத்து, "ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் முகமாக அமைதியான வழியில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். அவர்கள் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் விடுக்காது, தமது கோரிக்கையை முன்வைத்துப் போராடவுள்ளனர். அதற்கு மன்று அனுமதி வழங்க வேண்டும், - என்று விண்ணப்பம் செய்தார்.

சட்டத்தரணியின் விண்ணப்பத்தையடுத்து, உயர் பாதுகாப்பு வலயமாகக் கட்டமைக்கப்படும் பகுதிக்குள் செல்லாது, ஜனாதிபதி வரும் பாதையில் , வீதிக்குக் குறுக்காகச் செல்லாது, வீதியின் ஓரமாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுக்க மன்று அனுமதித்தது.

## 5 பொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு , ஜன 30

5 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், புதிய விலைகள் இன்று முதல் அமலுக்கு வருவதாகவும் லங்கா சதொச தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் மற்றும் கோதுமை மாவின் விலை தலா 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் புதிய விலை 220 ரூபாய். ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் புதிய விலை ரூ.165 ரூபாயாகும். ஒரு கிலோ கிராம் வெள்ளை சர்க்கரையின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டதால், அதன் புதிய விலை 235 ரூபாயாகும்..

ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பின் விலை ரூ.3 குறைக்கப்பட்டதால், அதன் புதிய விலை 285 ரூபாயாகும், இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை பருப்பின் விலை 1 ரூபாவால் குறைக்கப்பட்ட பிறகு, அதன் புதிய விலை 209 ரூபாயாகும் என்றும் தெரிவிக்கபட்டுள்ளது. (ஐ)

## சட்டவிரோத தராசுகள் கைப்பற்றல்



மட்டக்களப்பு , ஜன 30

மட்டக்களப்பு - வவுணதீவுப் பிரதேசத்தில் நெல் வாங்கப் பயன்படுத்தப்பட்டு வந்த, அளவை நிறுவைக்குப் பொருத்தமில்லாத, அனுமதியற்ற 3 தராசுகள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது வவுணதீவு பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், நெல் கொள்வனவு செய்யும் வர்த்தகர்களின் அளவை, நிறுவை கருவிகள் தொடர்பாக மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டிற்கமைய அளவைக் கருவிகளைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அவ்வேளையில் பரிசோதனையில் ஈடுபட்ட அதிகாரிகள் இவ்வாறு 3 தராசுகளைப் பயன்படுத்தி மோசடி செய்த வியாபாரிகளிடமிருந்து தராசுகளை கைப்பற்றியதோடு அவர்களைச் சட்ட நடவடிக்கைகக்கும் உட்படுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகாவின் ஆலோசனைக்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட பதில் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பரிசோதகர் வீ.ஜீ.ரீ.ஆர். நீலவல தலைமையிலான திணைக்கள உத்தியோகத்தர்கள், வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளன உப தலைவர் அருளானந்தம் ரமேஸ், பிரதேச செயலக அலுவலர்கள் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட தராசுகள் சீல் வைக்கப்பட்டு, அளவீட்டு அலகுகள் நியமங்கள், சேவைகள் திணைக்கள அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஐ)

## இன்று 50 மில்லி மீற்றர் மழை



கொழும்பு , ஜன 30

நாட்டின் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அந்தவகையில், வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா, தென் மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிழக்கு, ஊவா, தென், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், பொலன்னறுவை, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும்.

அத்துடன், நாட்டின் தெற்குப் பகுதியில் மேக மூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## சுதந்திர தின விழாவை பொதுமக்கள் பார்வையிட அனுமதி


கொழும்பு , ஜன 30

77வது சுதந்திர தின விழாவை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் டொக்டர் ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன இன்று தெரிவித்தார்.

இதனை பொதுமக்கள் நேரில் கண்டுகளிக்க அதிக வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, யாருக்காக சுதந்திர தின விழா நடத்தப்பட்டது என்ற கேள்வி எழுந்தது.இம்முறை, அதிக மக்கள் பங்களிப்புடன், மக்கள் சுதந்திர தின விழாவாக கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது, என அவர் கூறினார். (ஐ)

## தேங்காய் உற்பத்திகளை இறக்குமதி செய்ய தீர்மானம்



கொழும்பு , ஜன 30

தற்போதைய தேங்காய் பற்றாக்குறையை சமாளிக்க, இலங்கை இந்தோனேசியாவில் இருந்து தேங்காய் உற்பத்திகளை இறக்குமதி செய்ய உள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் கே.வி.சமந்த வித்யாரத்ன ஆகியோர் இணைந்து இந்த வாரம் சமர்பிக்க இருந்த கூட்டு அமைச்சரவை பத்திரம் தேங்காய் இறக்குமதிக்கான தற்போதைய நடவடிக்கைகள் மீள் மதிப்பீடு காரணமாக தாமதமானது.

தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க, இந்தோனேசியாவில் இருந்து முக்கியமாக இறக்குமதி செய்யப்படும் விதைகள், தேங்காய்த் பால்மா மற்றும் தேங்காய் பால் போன்ற தேங்காய் தொடர்பான பொருட்களின் இறக்குமதியை தேங்காய் சேதமடையாமல் இறக்குமதி செய்வதை உள்ளடக்குவதற்கு அமைச்சரவை பத்திரம் உள்ளதாக குறிப்பிட்டார். எவ்வாறாயினும், பல கலந்துரையாடல்களின் பின்னர் தேங்காய் இறக்குமதி தொடர்பான ஆய்வு தற்போது அமைச்சரவை பத்திரத்தில் கைவிடப்பட உள்ளது. "ஆராய்ச்சியின் படி, இந்தோனேஷியா தேங்காய் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மிகவும் பொருத்தமான நாடு" என்று திரு. ரணதுங்க கூறினார். தேவைக்கு ஏற்ப தேங்காய் தொடர்பான பொருட்களை இறக்குமதி செய்ய தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தலைவர் கூறினார். மொத்தமாக 200 மில்லியன் தேங்காய்களுக்கு சமமான தேங்காய் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன. புதிய அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# வக்பு வாரிய திருத்த மசோதாவை சபாநாயகரிடம் சமர்ப்பித்தது நாடாளுமன்ற கூட்டுக்குழு!



மத்திய அரசு கடந்த ஆண்டு கொண்டு வந்த வக்பு வாரிய திருத்த மசோதாவை நேற்று சபாநாயகரிடம் நாடாளுமன்ற கூட்டுக்குழு சர்ப்பித்த நிலையில் நாடாளுமன்ற கூட்டுக்குழு நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள ஏராளமான வக்பு வாரிய சொத்துக்களை முறைப்படுத்துவது, வாரியத்தில் முஸ்லிம் பெண்கள் மற்றும் முஸ்லிம் அல்லாத இரண்டு நபர்களை உறுப்பினர்களாக இடம்பெறச் செய்வது, வாரிய நிலங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டாயப் பதிவு செய்வது உள்ளிட்ட திருத்தங்களுடன் கடந்த ஆண்டு மத்திய அரசு இந்த மசோதாவை தாக்கல் செய்தது.

இது முஸ்லிம்கள் நிலம், சொத்துக்கள், மத விவகாரத்தை நிர்வகிக்கும் சுதந்திரத்தைப் பறிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இதையடுத்து, இந்த மசோதா குறித்து ஆய்வுசெய்ய பா.ஜ.க. எம்.பி. ஜெகதாம்பிகா பால் தலைமையில் கூட்டுக்குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலர் இடம் பெற்றிருந்தனர். பலமுறை கூடிய கூட்டுக்குழு அமளியிலேயே கழிந்தது. மொத்தம் 44 திருத்தங்கள் முன்மொழியப்பட்டு அதில் 14 ஏற்கப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்மொழிந்த அனைத்து திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டன.

இதற்கிடையே, திருத்தி அமைக்கப்பட்ட வக்பு வாரிய வரைவு மசோதாவுக்கு நாடாளுமன்ற கூட்டுக்குழு நேற்று ஒபபுதல் வழங்கியது. திருத்த மசோதாவுக்கு குழுவில் உள்ள 14 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். 11 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, கூட்டுக்குழு தலைவர் ஜெகதாம்பிகா பால் பேசுகையில், பெரும்பான்மையுடன் வரைவு மசோதா ஏற்கப்பட்டது. 656 பக்கங்கள் கொண்ட கூட்டுக்குழு அறிக்கையை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்தோம். இதை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் சமர்ப்பிக்க உள்ளோம் என தெரிவித்தார்.

இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டுக்குழுவினர் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை இன்று சந்தித்தனர். இதன்போது அவர்கள் வக்பு வாரிய திருத்த மசோதாவை சபாநாயகரிடம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பத்திரிக்கையாளர்களைப் புகைப்படம் எடுக்க வேண்டாம் என சைஃப் அலி கான் வலியுறுத்தல்!



கத்திக்குத்து விவகாரத்திற்குப் பின் வீடுதிரும்பிய சைஃப் அலி கான் பத்திரிக்கையாளர்களைப் புகைப்படம்எடுக்கவேண்டாம்என வலியுறுத்தியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை பாந்த்ராவில் உள்ள அடுக்குமாடி குடியிருப் பில் வசித்து வந்த பிரபல இந்தி நடிகர் சைஃப் அலிகான் வீட்டில் கடந்த 16-ந் திகதி நடந்த கொள்ளை முயற் சியில், அவர் 6 முறை கத்தியால் குத்தப்பட்டார். லீலாவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 5நாள் சிகிச்சைக்கு பிறகு அவர்வீடு திரும்பினார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் பங்களாதேஷை சேர்ந்த முகமது ஷரிபுல் இஸ்லாம் என்பவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் சைஃப் அலி கான் மற்றும் கரீனா கபூர் கான் தங்கள் மகன்களான தைமூர் அலி கான் மற்றும் ஜஹாங்கிர் அலி கானை புகைப்படம் எடுப்பதை தவிர்க்குமாறு பத்திரிக்கையாளர்களை வலியுறுத்தி உள்ளனர். மேலும், பாந்த்ரா வீட்டிற்கு வெளியே நிற்க வேண்டாம் என்றும், வெளியே செல்லும்போதும் வீட்டிற்கு திரும்பும்போதும் அவர்களை புகைப்படம் எடுக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டனர்.



## மகாத்மா காந்தி நினைவிடத்திற்கு மரியாதை செலுத்திய ராகுல் காந்தி!

மகாத்மா காந்தியின் நினைவுதினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சி தலைவரான ராகுல் காந்தி நேரில் சென்று மரியாதை செலுத்தியுள்ளார்.

1948 ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி தேசத்தந்தை மகாத்மா காந்தியை நாதுராம் கோட்சே சுட்டு கொன்றார்.

காந்தி படுகொலை செய்யப்பட்ட ஒரு வருடத்திற்குப் பிறகு, ஒரு விசாரணை நீதிமன்றம் கோட்சேவுக்கு மரண தண்டனை விதித்தது. 1949ஆம் ஆண்டு நவம்பரில் அந்த தீர்ப்பை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியது. இதையடுத்து நாதுராம் கோட்சே தூக்கிலிடப்பட்டார்.

தேசத்தந்தை மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட ஜனவரி .30-ஆம் திகதி தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜ/ன கார்கே ஆகியோர் டெல்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்தினர்.

இதனையடுத்து மகாத்மா காந்திக்கு மரியாதையை செலுத்தும் விதமாக ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் காணொளி ஒன்றையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஐதராபாத் இராணுவ பாடாசாலைக்கு விடுக்கப்பட்ட வெடிகுண்டு மிரட்டல்!

ஐதராபாத் இராணுவ பாடாசாலைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐதராபாத் போலாரத்தில் இராணுவ பாடாசாலை இயங்கி வருகிறது. இந்தப் பாடசாலைக்கு நேற்று நிகழ்நிலை மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. அதில் வளாகத்தைச் சுற்றி வெடிபொருட்கள் புதைகப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் உடனடியாக கட்டிடத்தை விட்டு மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர். நிலைமை குறித்து பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

விரிவான சோதனைக்கு பிறகு வெடிகுண்டு ஏதும் இல்லை என்பதை பொலிஸார் உறுதி செய்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர்.



# உறக்கம் எனும் மாமருந்து

உறக்கம்தான் நம் வாழ்வை முழுமையாக்குகிறது. ஆழ்ந்த உறக்கம் ஆரோக்கியத்தின் அடிப்படை. உறங்கும் போது தான் நமது உடல் தனக்குத் தேவையான ஆற்றலைத் திரட்டி, உறுப்புகளைப் புத்துணர்வாக்கி, அடுத்தநாளை எதிர்கொள்ள நம்மைத் தயாராக்குகிறது. சோர்வடைவ-தால் உறங்குகிறோம் என நினைக்கிறோம். உண்மையில், சோர்வடை-யாமல் புதுப்பித்துக்கொள்ளவே நாம் உறங்குகிறோம்.

மனதைக் கட்டுப்படுத்தவும், கோபம், துக்கம் ஆகியவற்றைக் குறைக்கவும் இயற்கையாகப் படைக்கப்பட்ட செயலே உறக்கம். இன்றைய இணைய உலகில் பலரும் பின்னிரவுகளில்தான் உறங்குகிறார்கள். இளைய தலைமுறையினர் மொபைலிலும் இணையத்திலும்தான் வாழ்க்கையையே நடத்துகின்றனர். இதனால், தூக்கமின்மை பிரச்சனை



அதிகரித்துள்ளது. தூக்கமின்மையால் பல பாதிப்புகள் வருவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

### உறக்கத்தைத் தூண்டும் மெலட்டோனின்

நம் உடலின் உறக்கச் சுழற்சி, அதாவது நாம் உறங்கும் நேரம், எழும் நேரம் ஆகியவற்றைத் தீர் மானிப்பது மெலட்டோனின் எனும் ஹோர்மோன்தான். இந்த ஹோர்மோன் இரவில் சுரக்க ஆரம்பித்து காலையில் நின்றுவிடும். நாம் மெலட்டோனின் சுரப்பை அதிகரிக்கும் உணவுகளை இரவில்

உண்ண வேண்டும். இதனால், சீக்கிரம் உறங் கிவிடலாம்.

இரவில் அதிக அளவு கிளைசமிக் இண்டெக்ஸ் (Glycemic Index) உள்ள உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த உணவுகளில் விற்றமின் பி6 அதிகம் இருக்கும். இது, மெலட்டோனினைச் சுரக்கச் செய்கிறது.

இரவு உறங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பு, பால் குடிப்பது, மெலட்டோனினைச் சுரக்கச் செய்கிறது.

நம் உடலில் உள்ள கல்சியம், தசைகளைத் தளர்வடையச் செய்வதால் தூக்கம் வரும். எனவே, கல்சிய சத்துக் குறைந்தாலும், தூக்கம் வருவதில் பாதிப்பு ஏற்படுகிறது.

தேன் நம் உடலில் டிரிப்டோபான் (Tryptophan) எனும் அமினோ அமிலத்தைச் சுரக்கச் செய்யும். இதுவே, மெலட்டோனினைச் சுரக்கச் செய்யும் வேதிப்பொருள்களில் ஒன்றாகும். இரவு பால் குடிக்கும் போது, அதில் இரண்டு மூன்று டீஸ்பூன் தேன் கலந்து குடிப்பதன் மூலம் நல்ல தூக்கம் வரும்.

ஓட்ஸ், கோர்ன் ஃபிளேக்ஸ் உள்ளிட்ட உணவு-களும் டிரிப்டோபானைச் சுரக்கச் செய்கின்றன. மேலும், நம் மனதை உற்சாகப்படுத்தும் செரோடோனின் (Serotonin) எனும் ஹோர்மோன், ஓட்ஸ் உண்பதன் மூலம் சுரக்கிறது.

பொட்டாசியமும் மக்னீசியமும் தசை-களைத் தளர்வடையச் செய்வதில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த இரண்டும் நிறைந்துள்ள வாழைப்பழ-த்தைத் தூங்கும் முன்பு உண்ணலாம். இதனால், செரிமானமும் மேம்படும். பாதாமில் மக்னீசியம் நிறைந்துள்ளது. இரவில் பாதாம் பால் குடிக்கலாம்.

### ஆழ்ந்த தூக்கத்துக்கு

வெளிச்சத்தில் மெலட்டோனின் சுரக்காது. அதனால், இருட்டான அறையில்தான் தூங்க வேண்டும்.

ஏதேனும் ஒரு சொல்லை மந்திரம் போல் முணுமுணுத்துக்கொண்டே இருக்கலாம். இரவு சாப்பிட்டுவிட்டு, அரை மணித்தியாலம் கழித்துக் கொஞ்ச நேரம் மிதமான நடைப்பயிற்சி செய்யலாம். இது, தூக்கத்தைத் தூண்டும்.

மனதுக்கு இதமான பாடல்களைக் கேட்கலாம். ஹெட்போன் அணிந்து கேட்கக் கூடாது. அதிக சப்தம் இல்லாமல் 5-10 நிமிடங்கள் பாடல்களைக் கேட்டுவிட்டு, உறங்-கச் செல்லலாம். இடதுகைப் பக்கமாக உறங்கினால் நெஞ்செரிச்சல் வராது. செரிமானம் மேம்படும். ஆழ்ந்த தூக்கம் கிடைக்கும்.

உறங்குவதற்குக் குறைந்தது ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாகவே, டிவி, மொபைல், கணனி ஆகியவற்றை அணைத்து விட வேண்டும். காரணம், நாம் பார்க்கும் ஒளி பிம்பங்கள், நம் விழித்திரையில் இருந்து அகலாதவரை, மெலட்டோனின் சுரப்பு நடக்காது.

### தூக்கத்தைக் கெடுக்கும் உணவுகளும், பழக்கங்களும்

ஃகாஃபின் (Caffeine) உள்ள உணவு, கோப்பி, டீ போன்றவற்றைத் தூங்குவதற்கு இரண்டு மணி-த்தியாலத்துக்கு முன்பு எடுத்துக்கொள்ளக் கூடாது.

இரவில் துரித உணவு கூடவே கூடாது. பர்கர், பீட்ஸா போன்றவை தூக்கத்தைத் துரத்தும் வில்லன்கள்.

மைதா உணவுகளும் தூக்கத்தைப் பாதிக்கும்.

கார்பனேடட் பானங்கள், கோலா, சோடா கலந்த பானங்கள் தூக்கத்தையும் பாதிக்கும் செரிமானத்துக்கும் தீங்கு.

உறங்கும் நேரத்தில் அதிகமாகத் தண்ணீரோ, நீர்ச்சத்து மிகுந்த உணவுகளோ எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கலாம். காரணம், இரவில் சிறுநீர் கழிக்க எழ வேண்டியது இருக்கும். இது தூக்கத்துக்கு இடை-யூறாக மாறலாம்.

### தூக்கமின்மை உருவாக்கும் பாதிப்புகள்

மனம் சார்ந்த பிரச்சனைகள்
ஜீரண மண்டலப் பிரச்சனைகள்
இதய நோய், ஞாபக மறதி
கோபம், எரிச்சல், மனஅழுத்தம்
உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்

**மனதுக்கு இதமான பாடல்களைக் கேட்கலாம். ஹெட்போன் அணிந்து கேட்கக் கூடாது. அதிக சப்தம் இல்லாமல் 5-10 நிமிடங்கள் பாடல்களைக் கேட்டு விட்டு, உறங்கச் செல்லலாம். இடதுகைப் பக்கமாக உறங்கினால் நெஞ்செரிச்சல் வராது. செரிமானம் மேம்படும். ஆழ்ந்த தூக்கம் கிடைக்கும்.**

# மலேசியாவில் கனமழை.. வெள்ளத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்ததாக தகவல்!



மலேசியாவில் பல பகுதிகளில் கனமழை பெய்து வருகின்ற நிலையில் வெள்ளத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.இந்த கனமழையினால் 5 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. கிட்டத்தட்ட 5000-த்திற்கும் மேற்பட்டார் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மலேசியாவின் சபா மற்றும் சரவாக்கின் சில பகுதிகளில் 700 மில்லிமீட்டருக்கும் மேல் மழை பதிவானதாக அந்நாட்டு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாளை வரை கனமழை தொடரும் என மலேசிய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

## காலிஸ்தான் அமைப்பு தலைவர் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இல்லை-கனடா தெரிவிப்பு!



காலிஸ்தான் அமைப்பு தலைவர் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இல்லை என கனடா நாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

கனடாவில் வசித்து வந்த காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த 2023-ம் ஆண்டு கொல்லப பட்டார்.

இந்த கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது.

இவ்விவகாரத்தால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

நிஜ்ஜார் கொலை மற்றும் கனடா தேர்தல்களில் வெளிநாடுகளின் தலையீடுகள் தொடர்பாக விசாரிக்கக் கனடா அரசு ஆணையம் ஒன்றை அமைத்தது. அந்த ஆணையம் விசாரணை நடத்தி தனது அறிகையை தாக்கல் செய்தது. 123 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் பல்வேறு தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் நிஜ்ஜார் கொலையில் வெளிநாட்டு சக்திகளுக்கு தொடர்பு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவின் தொடர்பு இருப்பதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதைத் தொடர்ந்து சிலர் நாட்டில் திட்டமிட்டு தவறான தகவல்களை பரப்பினர்.

இதுகுறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தவறானவை என்று கனடா நாட்டு ஆணையமே உறுதிப்படுத்தி இருக்கிறது.

## மூன்றாவது கட்டமாக விடுதலையாகும் எட்டு பிணைக்கைதிகள் –விவரத்தை வெளியிட்ட ஹமாஸ்!



மூன்றாவது கட்டமாக விடுதலையாகப் போகும் எட்டுப் பிணைக்கைதிகள் விவரத்தை ஹமாஸ் தற்போது வெளியிட்டுள்ளது .

இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையிலான போர் 15 மாதத்துக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த 2023-ம்ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250-க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாகப் பிடித்துச்சென்றனர். அதன்பின், தற்காலிக போர் நிறுத்தத்தின்போது 120-க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 94 பிணைக் கைதிகள் உள்ளனர். 34 பேர் உயிரிழந்துவிட்டனர்.


கத்தார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்தால் இருதரப்புக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் சமீபத்தில் அமலுக்கு வந்தது. இதுவரை இரு கட்டமாக 7 பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்துள்ளது

இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் 6 வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மேலும் விடுவிக்கப்பட உள்ள 8 பிணைக்கைதிகளின் பெயர் பட்டியலை ஹமாஸ் அமைப்பு நேற்று வெளியிட்டது. இவர்கள் இன்று விடுவிக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

இதுதொடர்பாக இஸ்ரேல் அதிகாரிகள் கூறுகையில், இந்த வாரம் இரு நாட்களில் காசாவில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தாய்லாந்து நாட்டை சேர்ந்த 5 பேர் உள்பட பிணைக்கைதிகள் 11 பேர் விடுவிக்கப்படுவர். ஹமாஸ் இதுவரை 7 பிணைக்கைதிகளை விடுவித்தது. அதற்கு ஈடாக கைதிகள் 290 பேர் இஸ்ரேலில் இருந்து விடுவிக்கப்பட்டனர் என தெரிவித்தார்.

## அமெரிக்காவில் பயங்கரம்: நேருக்கு நேர் மோதிய பயணிகள் விமானம்



அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணம் விச்சிட்டாவில் இருந்து பயணிகள் விமானம் ஒன்று தலைநகர் வாஷிங்டனில் உள்ள ரீகன் தேசிய விமான நிலையத்திற்கு புறப்பட்டு சென்றது.

அமெரிக்கன் ஏர்லைன்சுக்கு சொந்தமான அந்த விமானத்தில் 60 பயணிகள், 4 ஊழியர்கள் என 64 பேர் இருந்தனர். விமானம் ரீகன் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்தது. விமானம் போடோமேக் நதியின் மேல் பறந்து கொண்டிருந்தபோது அமெரிக்க ராணுவத்தின் பிளாக்ஹாக் ஹெலிகாப்டர் அருகே பறந்து கொண் டிருந்தது.

அப்போது ஹெலிகாப்டருடன் பயணிகள் விமானம் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் தீப்பிழம்பு ஏற்பட்டு பயணிகள் விமானம் ஆற்றில் விழுந்தது. இதையடுத்து மீட்புப்படையினர் அங்கு விரைந்து சென்றனர். அமெரிக்க பாதுகாப்புப் படை மற்றும் தீயணைப்புப் படையினர் ஆற்றில் தேடுதல் பணியை தொடங்கினர்.

படகுகளில் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்ட னர். நீச்சல் வீரர்களும் ஆற்றுக்குள் இறங்கி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். ஆம்புலனஸ்சுகள், மருத்துவக் குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் சிக்கிய 64 பேர் கதி என்ன என்பது தெரியவில்லை. தொடர்ந்து மீட்புப்பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இதற்கிடையே 2 பேர் பலியானதாக தகவல் வெளியாகி உள்ளது. அதேபோல் ராணுவ ஹெலிகாப்டரில் எத்தனை பேர் இருந்தனர் என்பது குறித்து உறுதியான தகவல் வெளியாகவில்லை.

விபத்தை தொடர்ந்து ரீகன் விமான நிலையம் மூடப்பட்டது. அங்கு அனைத்து விமானங்கள் புறப்படுதல் மற்றும் தரையிறங்குதல்களை நிறுத்தி வைத்துள்ளதாக விமான நிலைய இயக்குநர் தெரிவித்தார்.

விபத்து குறித்த தகவல்கள் அதிபர் டொனால்டு டிரம்புக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து டிரம்ப் கூறும்போது, விமான விபத்து குறித்து எனக்கு முழுமையாகத் தெரிவிக்கப்பட்டது. நிலைமையை கண்காணித்து வருகிறேன் என்றார்.

மேலும், விபத்துக்கான காரணம் குறித்து அமெரிக்க போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் தலைமையில் விசாரணை தொடங்கியுள்ளது.

## மாவையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)











பிரமுகர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

## தமிழரசின்..





இன்று காலை மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாக்கியசெல்வம் அரியநேத்திரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் மற்றும் கட்சியின் பொருளாளர் பெரியதம்பி கனகசபாபதி ஆகியோரால் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மதிப்பளிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு மதத் தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

1942 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி பிறந்த மாவை சேனாதிராஜா சிகிச்சை பலனின்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இரவு காலமானார்.

## மாவையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைக்காகக் குரல் எழுப்பி வந்தார். அவரின் மறைவானது தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது மறைவுச் செய்தி பெரும் மன வேதனையையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் மறைவானது தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

1942 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த மாவை சேனாதிராஜா, அரசியல் மற்றும் பொதுச் சேவை ஆகியவற்றில் தனது வாழக்கையை அர்ப்பணித்திருந்தார். அவர் ஒரு சிறந்த அரசியல்வாதியும், திறமையான பேச்சாளரும், தைரியமான மனித உரிமைகள் செயற்பாட்டாளருமாவார்.

மாவை சேனாதிராஜா தனது 19 ஆவது வயதில் அரசியல் பயணத்தைத் தொடங்கி தனது 83 ஆவது வயது வரை தமிழ் மக்களுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

போருக்கு முன்னரும் பின்னரும் அவரது அரசியல் செயற்பாடுகள் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டுள்ளன. அவர் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்து போராடி சிறைவாசமும் அனுபவித்தவர்.

தனது அரசியல் வாழ்க்கையில், அநீதிக்கு எதிராகவும், நீதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் துணிந்து குரல் கொடுத்த மாவை சேனாதிராஜா, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவராக கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ஏறக்குறைய 10, வருடங்கள் தலைவராக செயற்பட்டு, ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு எதிராகக் கடுமையாகப் போராடினார்.

அரசியலின் மீதான அவரது ஆர்வம் அவரை தமிழ் அரசியலில் மிகவும் வெற்றிகரமான மற்றும் மரியாதைக்குரிய தலைவர்களில் ஒருவராக திகழச் செய்தது. தமிழ் அரசியலில் மாத்திரமின்றி தேசிய அரசியலிலும் அசாத்தியமான திறமையும், துணிச்சலும், தொலைநோக்குப்பார்வையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

பயங்கரவாத அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டு அழிந்து கொண்டிருந்த ஒரு தேசத்தில், அச்சமற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள தலைவராக உருவெடுத்தார். எப்போதும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கவும் பொதுவான நிலையைக் கண்டறியவும் முயற்சித்தார். தமிழர் அரசியல் பரப்பில் மாவை ஒரு யதார்த்தவாதியாக திகழ்ந்தார். பொதுவான இலங்கை அடையாளத்தில் வேற்றுமையில் ஒற்றுமையை காணும் பயணத்தை நம்பினார்.

சுதந்திரம் கிடைத்து 77 ஆவது ஆண்டு நிறைவுறும் தருணத்தில், தனித்துவங்களை பாதுகாத்துக் கொண்டு பிரச்சினையாக இருந்து வரும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் புதிய உபாயங்கள் மூலம் வெளிப்படையான பிரவேசத்துக்கான நடவடிக்கைகளை எடுப்பதே மாவை சேனாதிராஜாவுக்கு நாமளிக்கும் சிறந்த கௌரவமாகும்.

அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பாகவும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்." - என்றுள்ளது.

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அடையாளம் என்பது நிதர்சனம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மிக நீண்ட காலமாகத் தமிழர் ஜனநாயக சாலையில் பயணித்த, மாவை சேனாதிராஜா என்ற தமிழ்த் தேசிய வாகனம் நின்று விட்ட சம்பவம் இன்று நிகழ்ந்தே விட்டது. பல உணர்வு மிக்க தரிப்பிடங்களையும், கடவைகளையும், தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களுடன் நான் கடந்து வந்துள்ளேன். இதிலேயே அண்ணன் மாவையுடன் மிக நீண்ட காலமாக நான் பயணித்தும் உள்ளேன்.

இன்றைய இந்தச் சோகத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் பங்குகொள்கின்றோம். எங்கள் அனுதாபங்களை அவரை இழந்து வாடும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும், அவரது கட்சிக்கும், மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

## சிவஞானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் மாவையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## அநீதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரிழப்பாகும்." - என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் மறைவு செய்தி பெரும் மன வேதனையைத் தருகின்றது. அவரின் மறைவானது தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அநீதிக்கு எதிராகவும், நீதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் துணிந்து குரல் கொடுத்த மாவை சேனாதிராஜா, ஜே.வி.பியின் ஸ்தாபகர் தோழர் ரோஹண விஜேவீரவின் போராட்டங்களைக்கூட நேர்கொண்ட பார்வையுடன் அவதானித்தனர். ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு எதிராக ஜே.பி.யின் அணுகுமுறை தொடர்பில் ஆதரவு போக்கைக் கடைபிடித்தவர்.

5 தசாப்தகால அரசியல் பயணத்தின்போது, மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்ட அரசியல்வாதியாவார். மாவை அண்ணன் மறைந்தாலும், மக்களுக்காக அவர் எதிர்பார்த்தவற்றை நிச்சயம் நாம் செய்வோம்.

மாவை சேனாதிராஜாவின் பிரிவால் துயர் உற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார், ஆதரவாளர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கின்றேன்." - என்றுள்ளது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2025 இல் வெளியிடப்பெற்றது.